**முக்கியமான நாட்கள்**

**மே 18: உலக எய்ட்ஸ் தடுப்பூசி தினம்**

- எச்.ஐ.வி. தொற்று மற்றும் எய்ட்ஸை தடுக்க தடுப்பூசி மிக அவசியமான, அவசரத் தேவையாக உள்ளது. இதனை கண்டுபிடிக்க விஞ்ஞானிகளும், மருத்துவர்களும் முயன்று வருகின்றனர். இது சார்ந்த விழிப்புணர்வு ஏற்படுத்த 1998ஆம் ஆண்டிலிருந்து மே 18 அன்று எய்ட்ஸ் தடுப்பூசி விழிப்புணர்வு தினம் அனுசரிக்கப்படுகிறது.

**தேசிய செய்திகள்**

**ஜம்மு காஷ்மீர்**

**ஸோஜிலா சுரங்கப் பாதை**

- ஸ்ரீநகர், கார்கில் மற்றும் லே பகுதிகளை இணைக்கும் வகையில் 14 கி.மீ. தூரத்துக்கு அமைக்கப்படும் சுரங்கச்சாலைக்கு பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார். ஆசியாவிலேயே மிக நீண்ட இருதிசை சுரங்கப் பாதையான இது, ரூ.6,800 கோடி செலவில் அமைக்கப்படுகிறது.

**கேரளம்**

**தென்மேற்கு பருவமழை**

- தென்மேற்கு பருவமழை மே 29 ம் தேதி கேரளாவிற்கு அதன் சாதாரண நாளின் தேதிக்கு முன்னதாக, வந்து சேரும் என எதிர்பார்க்கப்படும் என இந்தியாவின் வானிலை ஆய்வு மையம் (IMD) தெரிவித்துள்ளது.

**சர்வதேச செய்திகள்**

**அமெரிக்கா மைகிரைன்ஸ் தடுப்புக்காக புதிய மருந்துகளை அங்கீகரிக்கிறது**

- ஐமோவிக் என்பது மைகிரைன்ஸ் தடுப்புக்கான கால்சிட்டோனின் மரபணு தொடர்பான பெப்டைட் செயல்பாட்டை தடுப்பதன் மூலம் செயல்படும் மருந்துகள் ஆகும்.

**அறிவியல் செய்திகள்**

**தண்ணீரில் ஆர்சனிக் கண்டுபிடித்து அகற்றுவதற்கு புதிய சாதனம்**

- ADO ஆடிட்டிவ்ஸ் மற்றும் கொல்கத்தாவிலுள்ள இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (IISER) தண்ணீரில் ஆர்சனிக் அளவை கண்டுபிடிப்பதற்கும் அதை அகற்றுவதற்கும் ஒரு தீர்வைக் கண்டுபிடித்திருக்கின்றன.

**நாசா செயற்கைக்கோள்கள் இந்தியாவில் நன்னீர் சரிவை வெளிப்படுத்தியுள்ளன.**

- இந்தியாவில் நீர் வளங்களை அளவிற்கு அதிகமாக பயன்படுத்துவதால் நன்னீரின் அளவு மிகவும் குறைந்துள்ளதாக புவியை பூமியை கண்காணித்து நாசாவின் செயற்கைக்கோள் தகவல் தெரிவித்துள்ளது.

**வணிக & பொருளாதாரம்**

**பார்சல் சரக்கு எக்ஸ்பிரஸ் ரயில் (PCET)**

- அஸ்ஸாமின் கவுகாத்தியில் மகாராஷ்டிராவின் கல்யாண் நிலையம் வரையிலான புதிய பார்சல் சரக்கு சேவை தொடங்கப்பட்டுள்ளது.

**இந்தியாவின் வளர்ச்சி 2018-19 ல் 7.6% ஆக உயரும்: U.N. அறிக்கை**

- 2017-17 ல் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 7.5 சதவீதமாகவும் 2018-19 ல் 7.6 சதவீதமாகவும் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**நிதி ஆயோகின் மூன்று நாள் வென்ச்சர் கேபிடல் சிம்போசியம் 2018**

- விஷன் இந்தியா பவுன்டேஷன் உடன் இணைந்து நிதி ஆயோக் பிரான்ஸ் மற்றும் இந்தியாவுடனான பொருளாதார உறவுகளை ஆழப்படுத்த வென்ச்சர் கேபிடல் சிம்போசியம் 2018 ஐ ஏற்பாடு செய்துள்ளது.

**புரிந்துணர்வு ஒப்பந்தம்(MoU),ஒப்பந்தங்கள்& மத்திய அமைச்சரவை ஒப்புதல்**

**இந்தியா மற்றும் இந்தோனேசியா கடல்சார் மற்றும் உள்கட்டமைப்பு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை ஊக்குவிக்கின்றன**

- இந்திய மற்றும் இந்தோனேசியாவிற்கான கடல்வழி பயிற்சி மற்றும் கல்வி ஆகியவற்றில் ஒத்துழைப்பை அபிவிருத்தி செய்ய , இந்திய கடல்சார் பல்கலைக்கழகம் மற்றும் இந்தோனேசிய கல்வி நிறுவனங்களுக்கிடையே கடல் சார்ந்த படிப்புகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது .

**தில்லியில் உள்ள 1000 பேருந்துகளை கொள்முதல் செய்வதற்காக டெல்லியில் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது**

- தில்லி அமைச்சரவை ,1000 சிஎன்ஜி யில் இயங்கும் பஸ்களை கொள்முதல் செய்யும் ஒரு திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியது.

**மாநாடுகள்**

**தென்னாப்பிரிக்காவில் டர்பனில் 4 வது பிரிக்ஸ் மந்திரி கூட்டம்**

- வளம் குறைபாடு மற்றும் பற்றாக்குறை சம்பந்தமான விஷயங்களுக்காக மற்றும் வளங்களை ஒரு நியாயமான முறையில் பயன்படுத்துவதற்கு இந்தியா அழைப்பு விடுத்துள்ளது.

### ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (SCO) கலாசார மந்திரிகள் கூட்டம்

- சன்யாவில் , 2018, மே 16 மற்றும் 17 ஆம் தேதிகளில் நடைபெற்ற ஷாங்காய் கூட்டுறவு அமைப்பு (SCO) உறுப்பு நாடுகளின் கலாச்சார அமைச்சர்களின் 15 வது கூட்டத்தை டாக்டர் மகேஷ் சர்மா தலைமை தாங்கினார்.

### தரவரிசை & குறியீடுகள்

### உலகின் மிகப் பெரிய நகரம் : ஐ.நா. அறிக்கை

- தில்லி உலகிலேயே மிகப்பெரிய நகரமாக மாறும் என ஐ.நா. அறிக்கை தெரிவித்துள்ளது.

### விருதுகள்

### எஸ் அண்ட் பி பிளாட்ஸ் குளோபல் மெட்டல்ஸ் விருது

- லண்டனில் 17.05.2018 அன்று நடைபெற்ற நிறுவன சமூக பொறுப்புணர்வு (CSR) பிரிவில் NMDC லிமிடெட் மதிப்புமிக்க எஸ் அண்ட் பி பிளாட்ஸ் குளோபல் மெட்டல்ஸ் விருது 2018 ஐ பெற்றுள்ளது.

### கேரளா சுற்றுலாத் துறைக்கு முகநூல் லாரல் கிடைத்துள்ளது

- கேரளா சுற்றுலாத் துறை முகநூல் பக்கத்தில் அதிக லைக்குகளை பெற்று உள்ளது.

### நியமனங்கள்

### மணிப்பூர் உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி

- நீதிபதி ராமலிங்கம் சுதாகர் மணிப்பூர் உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக பதவியேற்றார்.

**NHAI தலைவர்**

- சாலை, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயலாளர் யுதிர்வீர் சிங் மாலிக்கிற்கு தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் (NHAI) தலைவர் பதவி கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது.

**தெற்காசிய ஆய்வுகள் நிறுவனத்தின் இயக்குனர்**

- சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் சிந்தனைக் குழுவான தெற்காசிய ஆய்வுகள் நிறுவனத்தின் இயக்குனராக இந்திய கல்வி மற்றும் வெளிநாட்டு கொள்கை ஆய்வாளர் சி. ராஜா மோகன் நியமிக்கப்பட்டுள்ளார்.

**பேட்மின்டன் ஆசியா கூட்டமைப்பின் துணைத் தலைவர்**

- ஹிமான்டா பிஸ்வா சர்மா ஆண்டு பொது கூட்டத்தில் பேட்மின்டன் ஆசியா கூட்டமைப்பின் (பிஏசி) துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**கினா ஹெஸ்பெல் - சிஐஏவின் முதல் பெண் இயக்குநர்**

- ஜினா ஹெஸ்பெல் முதன்முதலாக CIA தலைவரான முதல் பெண்மணி ஆவார்.